## 8.39 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – திட்ட அலுவலர்களின் தனியார் குடியிருப்புகளுக்கு உரிய வாடகை உச்சவரம்பு ரூ.1000/–லிருந்து ரூ.3000/–மாக உயர்த்துதல்

---

ஊரக வளர்ச்சி ( எஸ்.ஜி.எஸ்.ஒய் ) துறை

அரசாணை (நிலை) எண். 125 நாள் : 23.4.2001

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.806, ஊரக வளர்ச்சி, நாள் 19.12.88
2. ஊரக வளர்ச்சி ஆணையர் கடிதம் ந.க.எண்.78800/99/ எஸ்ஜிஎஸ்ஒய்/1–1 நாள் 10.09.1999

**ஆணை**

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர்களுக்கான தனியார் குடியிருப்புகளின் வாடகை உச்சவரம்பு ரூ.1000/– என 19.12.1988 நாளிட்ட அரசாணை 806ன் படி நிர்ணயிக்கப்பட்டது என்றும், ஆணை வெயியிடப்பட்டு 11 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் மாவட்ட தலைநகரங்களில் தனியார் குடியிருப்புகள் வாடகைக்கு இத்தொகைக்குள் கிடைப்பதில்லை என்றும், எனவே வாடகை தொகையினை ரூ.5000/– ஆக உயர்த்தி வழங்குமாறு ஊரக வளர்ச்சி ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. ஊரக வளர்ச்சி ஆணையர் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்களின் தனியார் குடியிருப்புகளின் மாத வாடகை உச்சவரம்பை ரூ.3000/– (ரூபாய். மூவாயிரம் மட்டும்) என நிர்ணயம் செய்து அரசு ஆணை வெளியிடுகிறது.

3. இவ்வாணை நிதித்துறை அ.சா.கு.எண்.1296/எவ்எஸ்/பி/2001 நாள் 17.04.2001 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்